

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினரும் தா.பழூர் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளருமான க.சொ.க.கண்ணன் மருத்துவர் மாலதி இவர்களின் மகள் மதுமிதா அவர்களின் மஞ்சள் நீராட்டு விழாவில் அமைச்சர் பெருமக்கள் கே.என் நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், சி.வி.கணேசன், கோ.வி.செழியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சித்தமிழர் தொல்.திருமாவளவன், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், பெரம்பலூர் மாவட்ட பொறுப்பாளர் ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர்கள் க.அன்பழகன், எம்.பிரபாகரன், ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தினார்கள். மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.



நேபாளத்தில் நடைபெற்ற சர்வதேச இளைஞர் விளையாட்டு சாம்பியன்ஷிப் சிலம்பப் போட்டியில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செயல் துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் வாழ்த்துக் கூறினார். இதில் வெள்ளக்கோவில் ஒன்றியச் செயலாளர் எஸ்.சந்திரசேகர், முத்தூர் பேரூர் செயலாளர் செண்பகம் பாலு உள்பட பலர் உள்ளனர்.

### மக்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் மக்களுடன் முதல்வர்

# முகாம்கள் மூலம் சிறு சிறு தேவைகளையும் நிறைவேற்றுகிறார் முதல்வர்!

## தோழமைக் கட்சியினர் பாராட்டு!

திருவாரூர், மே 29-

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதியில் மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் முகாமினை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். மாவட்டச்செயலாளர்ர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., வை.செல்வராஜ் எம்.பி.,சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

இம்முகாம்களின்மூலம் பொதுமக்கள் அரசு அலுவலகங்களை நோக்கி செல்லாமல் அவர்களுக்கு தேவையான மக்கள் சேவைகளை வழங்குவதற்கு அரசே அவர்களிடம் வந்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம் பெறப்பட்ட மனுக்களின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. முதல் இரண்டு கட்ட மக்களுடன் முதல்வர் முகாமினை தொடர்ந்து, தற்பொழுது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மக்களுடன் முதல்வரின் மூன்றாம் கட்டம் தொடங்கி வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர் என உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் தெரிவித்தார்.

முகாம்களில் பங்கேற்ற தோழமைக் கட்சியான சி.பி.ஐ. கட்சியைச் சேர்ந்த எம்பி.வை.செல்வ ராஜ், எம்.எல்.ஏ.மாரிமுத்து ஆகியோர், தங்கள் உரையில் தமிழ்நாடு முதல்வர் நம் மக்களுக்கான அனைத்து தேவைகளையும் தனது அற்புத திட்டங்களால் நிறைவேற்றித்தந்து கொண்டிருந்தாலும், தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் மக்களுடன் முதல்வர் முகாம்களை நடத்தி மக்களின் சிறு சிறு தேவைகளையும்கூட நிறைவேற்றி தருகிறார் என்று குறிப்பிட்டு பேசினர்.

தொடர்ந்துநடைபெற்ற அனைத்து முகாம்களிலும் மனுகொடுத்த அனைவருக்கும் அவரது தேவைகள் உடனுக்குடன் நிறை வேற்றப்பட்டும், ஆலோசனைகளும் அந்தந்த துறை அலுவலர்களால் வழங்கப்பட்டது.

மேலும் வருவாய்துறையின் இலவச வீட்டு மனைப் பட்டாவும், வருவாய் துறையின் சார்பில் சாதி சான்றிதழ் மற்றும் வருமான சான்றிதழும், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கான ஆணையினையும்,

மாவட்ட வழங்கல் துறையின் சார்பில் புதிய மின்னணு குடும்ப அட்டையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறையின் சார்பில் மருத்துவ காப்பீடு அட்டையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு காது கேட்கும் கருவிகளும், கொக்கலாடி தொடக்க வேளாண்மை மற்றும் கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுவிற்கு கடன் உதவியும், டாம்கோ திட்டத்தின் கீழ் கடனுதவியும், வேளாண்மைத்துறையின் சார்பில் நெல் நுண்ணூட்டம், பருத்து நுண்ணூட்டம், சிங்க் சல்பேட், டிரக்கோடெர்மா விரிடி, உயிரி உரம் உள்ளிட்ட இடு பொருட்களும், இலவச வீட்டுமனை பட்டாவும், உழவர் பாது காப்பு திட்டத்தின் பயனாளிகளுக்கு உதவித்தொகையும், சீர் மரபினர் நல வாரிய அட்டைகளும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் நலத்திட்ட உதவிகளும், இயற்கை மரணத்திற்கான நிதியுதவியும் வழங்கப்பட்டது.

முகாம்களில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ஆடலரசன்,ஒன்றிய செயலாளர்கள் ப.பிரகாஷ், இரா.மனோகரன், பால. ஞானவேல், மாவட்ட துணை செயலாளர்கள் எம். எஸ். கார்த்திக்,எம்.ராமகிருஷ்ணன், செல்வா.ஜெயதேவன்,வழக்கறிஞர் எஸ். பி.பாஸ்கர், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் நாகராஜ் தாஜிதீன் எம். என். ராஜா, குன்னலூர். அன்பழகன், எம்.பி.எடிசன், வினோத்குமார், சீனி. இளையராஜா, மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### என்.கௌதமன் தலைமை! பி.என்.கார்த்தி வரவேற்புரை!

# நாகை மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம்!

## என்.இளையராஜா , மதுரைபாலா, விக்னேஷ்ஆனந்த் சிறப்புரை!

நாகை, மே 29-

நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் நாகையில் தளபதி அறிவாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ். அசோக், எஸ்.டேனியல்சத்தியா, கே.சுரேஷ்குமார், ஜி.தாமேதரன், பன்னீர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி. என்.கார்த்தி வரவேற்றார். கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாரும், தாட்கோ தலைவர் என்.இளையராஜா, தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் மதுரைபாலா, சமுக வளைத்தள பயிற்சியாளர் விக்னேஷ்ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள் .

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர் மணி வண்ணன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ. தாமஸ்ஆல்வாஎடிசன், மகா.குமார். கே.பழனியப்பன், செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், என்.சதாசிவம், சோ.பா. மலர்வண்ணன், க.பழனியப்பன், நகரக் கழகச் செயலளார்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் கோசி.குமார், உமா செந்தாமரைசெல்வன், பேரூர் கழகச் செயலாளர்கள் மரியசார்லஸ், முகமதுசுல்தான், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சம்பத், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.கலையாரசன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கு சமூக வலைதள பயிற்சி வழங்கப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

சட்டமன்ற வரலாற்றில் அதிக முறை சட்ட மன்ற உறுப்பினராக நின்ற அனைத்துத் தேர்தலிலும் வென்ற, 5 முறை முதல்வராக இருந்து தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி, கல்வி தரத்தை உயத்தி, வேலை வாய்பை உருவாக்கி தமிழகத்தை வளர்ச்சி பாதைக்கு கொண்டு சென்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜுன் 3ம் தேதி நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதியிலும் கழக இளைஞர் அணியினர் தாய் கழகத்தோடு இணைந்து கலைஞர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்றும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை செம்மொழி நாளாக அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நாகை மாவட்ட இளைஞர் அணி சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், கழக இளைஞர் அணிக்கு கிளைகள், வார்டுகள் தோறும் இளைஞர் அணி நிர்வாகிகளை, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர் தேர்வு செய்து அதன் பட்டியலை கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலினிடம் ஒப்படைக்க உடன் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைத்திட வேண்டும் என்றும், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜாவுக்கு தாட்கோ தலைவராக நியமனம் செய்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நாகை மாவட்ட இளைஞர் அணி சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டது.

### தி.மு.க. மருத்துவ அணி

## தூத்துக்குடி தெற்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தூத்துக்குடி தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட டாக்டர் கலீல் ரகுமான் அவர்கள் மறைவெய்திய காரணத்தால் மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளராக பணியாற்றி வரும் டாக்டர் அஜய் ரெக்ஸ், எம்.எஸ்., (நெ. 4, டவ் இல்லம், முதலூர் மெயின் ரோடு, புதூர், தூத்துக்குடி 628702) அவர்கள் தூத்துக்குடி தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"<br>
சென்னை - 18<br>
நாள்- 27.05.2025

டாக்டர் **எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.**<br>
செயலாளர்,<br>
தி.மு.க. மருத்துவ அணி

### நிவேதா எம்.முருகன் தலைமை! எம்.கே.மருது வரவேற்புரை!

# மயிலாடுதுறை மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம்!

## என்.இளையராஜா , மதுரைபாலா, விக்னேஷ்ஆனந்த் சிறப்புரை!

மயிலாடுதுறை, மே 29-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் மயிலாடுதுறையில் விஜய் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைலமை தாங்கினார். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜுபையர்அகமது, சர்வோதயன், கோசி.திருமாவளவன், எம்.எஸ்.விஜய், ஆனந்தன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது வரவேற்றார். கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளரும், தாட்கோ தலைவர் என்.இளையராஜா, தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் மதுரைபாலா, சமூக வலைதள பயிற்சியாளர் விக்னேஷ்ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள் .

கூட்டத்தில் மாநில விவசாய அணி இளைச் செயலாளர் ஆர்.அருள்செல்வன், மாவட்ட அவைத்தலைவர் கே.ஜி.சினிவாசன், துணைச் செயலாளர்கள் எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம். எம்.சித்திக், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஞான. இமையநாதன், அமிர்த.விஜயக்குமார், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், பஞ்சு.குமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், ஏ.ஆர்.ராஜா, மங்கை எம்.சங்கர், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பேரூர்க் கழகச் செயலாளர்கள் எஸ்.முத்துராஜா, அண்ணாதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் கென்னடி, காந்தி, எஸ்.சுவாமிநாதன், ஹர்ஷத், நத்தம் வின்சென்ட், எஸ்.சங்கரநாராயன், ஜெ.கபிலன், சுபாநெடுஞ்செழியன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வினோத் பாண்டியன் நன்றி கூறினார். கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கு சமூக வலைதள பயிற்சி வழங்கப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 2026 சட்ட மன்ற தேர்தலில் கழகத் தலைவர் தளபதி அவர்களின் இலக்கான 200 தொகுதிக்கு மேல் என்ற அறிவிப்புக்கு இனங்க இளைஞர் அணியினர் இன்றே தேர்தல் பணியை தொடங்கிடும் கழக அரசின் சாதனைகளை வகையில் சமூக வளைதளங்களிலும் பதிவிட்டும், பொது மக்களிடம் கழக அரசின் சாதனைகளை எடுத்து கூறி கழக வெற்றிக்கு மயிலாடுதுறை மாவட்ட இளைஞர் அணியின் ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் உழைத்திடுவது என்றும், கழக இளைஞர் அணிக்கு கிளைகள், வார்டுகள் தோறும் இளைஞர் அணி நிர்வாகிகளை, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர் தேர்வு செய்து அதன் பட்டியலை கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலினிடம் ஒப்படைக்க உடன் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைத்திட வேண்டும் என்றும், சட்ட மன்ற வரலாற்றில் அதிக முறை சட்ட மன்ற உறுப்பினராக நின்ற அனைத்து தேர்தலிலும் வென்ற, 5 முறை முதல்வராக இருந்து தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி, கல்வி தரத்தை உயர்த்தி, வேலை வாய்பை உருவாக்கி தமிழகத்தை வளர்ச்சி பாதைக்கு கொண்டு சென்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜுன் 3ம் தேதி நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதியிலும் கழக இளைஞர் அணியினர் தாய் கழகத்தோடு இணைந்து கலைஞர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்றும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை செம்மொழி நாளாக அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட இளைஞர் அணி சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜாவுக்கு தாட்கோ தலைவராக நியமனம் செய்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நாகை மாவட்ட இளைஞர் அணி சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டது.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், மாற்றுக் கட்சிகளைச் சார்ந்த துபேல் , ஷாஜகான், சுஹல், ஜாபர் ,சாதிக், உள்ளிட்ட 50 மேற்பட்டோர் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், முன்னிலையில் திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைந்தனர் அவர்களுக்கு இரு வண்ண துண்டை அணிவித்து வரவேற்றார். உடன் மாவட்ட துணை செயலாளர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், கிருஷ்ணகிரி நகரக் கழக செயலாளர்கள் அஸ்லாம், வேல்மணி, கட்சியில் இணையும் ஏற்பாட்டை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ் ராஜன் ஏற்பாடுகளை செய்து இருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி தையல்நாயகி முத்துசாமி

### மே 29 (2001)



சென்னை, துறைமுகம் பகுதிக் கழக மகளிர் அணி அமைப்பாளராகவும் – சிவகங்கை மாவட்டக் கழக மகளிர் அணி அமைப்பாளராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் – பானை உடைப்புப்போராட்டம் – நீதிகேட்டு நெடும் பயணம் போன்ற கழகம் நடத்திய போராட்டங்களில் பங்கேற்றவர்.

பால்கமிஷன் அறிக்கை தொடர்பாக தலைவரை அவரது இல்லத்தில் கைது செய்ய முற்பட்டபோது, காவல்துறை வாகனம் முன்பு படுத்து மறியல் செய்து, தடியடிக்கு ஆளாகி மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டவர்.

இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட நிலையில் காரைக்குடியில் சித.சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஈழத் தமிழர் ஆதரவு ரயில் மறியல் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்<br>
தி.மு.க.